# அவசர கூட்டப்பொருள்கள்

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ` தமிழ் நாடு தொலைநோக்கு 2023 `–ல் குறிப்பிட்டுள்ளபடியும், நகராட்சி திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவத்தைக் கணக்கில் கொண்டும், தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் பொதுவான நகராட்சி திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்பாடு செய்ய பிரேரணை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் நகராட்சி, பத்மனாபபுரம் நகராட்சி, குளச்சல் நகராட்சி மற்றும் குழித்துறை நகராட்சி ஆகிய பகுதிகளில் கிளிஸ்டர் அடிப்படையில் நகராட்சி திடக்கழிவுகளை கையாண்டு தீர்வு செய்யும் வசதிகளை மேம்படுத்த பிரேரணை தயார் செய்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.63,08 கோடியாகவும், மண்டல செயல்பாட்டு வசதியமைப்பான நாகர்கோவில் நகராட்சிக்கு மட்டுமேயான திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.51.27 கோடியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டுப்பங்களிப்பு முறைப்படி செயல்படுத்தவும் பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே மொத்த திட்ட மதிப்பீட்டில் 75% ஆன ரூ.47.31 கோடியை திடக்கழிவு மேலாண்மை நிதியின் மூலம் மற்றும்/அல்லது தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மூலம் பெற்று திட்டத்தைச்செயல்படுத்தவும் மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள ரூ.15.77 கோடியை தனியார் இயக்குவோர் மூலம் பெறவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1. ரூ.63.08 கோடிக்கான மொத்த திட்ட மதிப்பீட்டை அனுமதிக்கலாம்.
2. திட்டத்தைச் செயப்டுத்தத் தேவையான நிதியைப் பெறவும், திட்டத்திற்கான சரியான விதிமுறைகளை அஙகீகரிக்கவும், பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை மூலமாக அரசுக்கு அனுப்பலாம்.

ந.க.எண்.13848/2014/இ1

**தீர்மான எண் : 627 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு பொது மக்களிடமிருந்து குடியிருப்பு இணைப்புகளுக்கும் மற்றும் குடியிருப்பு அல்லாத இணைப்புகளுக்கும் இந்நகர்மன்ற தீர்மான எண்.592 நாள். 13.10.2004–ல் கீழ் கண்டுள்ளப்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | வைப்புத்தொகை ரூ. | மாதாந்திர கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | குடியிருப்புகள் | 6000/– | 95/– |
| 2 | குடியிருப்பு அல்லாத இனஙகள் | 10,000/– | 225/– |

மேற்கண்டுள்ளப்படி நிர்ணயம் செய்யும் போது, 500 ச.அடியில் உள்ள சிறிய வீடுகள் இந்நகராட்சி பகுதியில் 40,165 உள்ளது. எனவே அவைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் மற்ற நகராட்சிகளில் குறிப்பாக நாகப்பட்டினம் நகராட்சியில் சதுர அடி அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளப்படி கீழ்கண்டுள்ள விபரப்படி திருத்திய வைப்புத்தொகை, மாதாந்திர கட்டணம், மற்றும் இணைப்பு கட்டணமாக ரூ.100/–ம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| கட்டிடத்தின் பரப்பளவு | வைப்புத்தொகை | | மாதாந்திர கட்டணம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் ரூ. | வணிக உபயோகம் ரூ. | வீட்டு உபயோகம் ரூ. | வணிக உபயோகம் ரூ. |
| 500ச.அடி வரை | 5000–/ | 10,000/– | 100/– | 150/– |
| 501 முதல் 1200 வரை | 7500/– | 15,000/– | 110/– | 200/– |
| 1201 முதல் 2400 வரை | 9000/– | 25,000/– | 120/– | 400/– |
| 2401–க்கு மேல் | 10,000/– | 50,000/– | 150/– | 1300/– |

**அலுவலக குறிப்பு–** மேற்கண்டுள்ளபடி திருத்திய கட்டணவிகிதத்தில் நிர்ணயம் செய்யும்போது பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம், நகராட்சிக்கும் வருவாய் அதிகரிக்கும் என்பதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4596/2010/இ1

**தீர்மான எண் : 628 – ஒத்தி வைக்கப்பட்டது.**